(ஆ) 80 மீற்றர்கள் நீளத்துடனுள்ள உடையார்கட்டு குளத்தின் அணைக்கட்டிற்கான அத்திவாரக் கற்கட்டுப் பாதுகாப்பு முறையான ரீதியில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரின் விளக்கங்களின் பிரகாரம், செயற்திட்டத்தினால் ஒதுக்கப்பட்ட நிதிகளின் வரையறை காரணமாக அணைக்கட்டின் ஆபத்தான பகுதிகளுக்காக மாத்திரமே அத்திவாரக் கற்கட்டு பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டது.

(இ) முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விஸ்வமடு குளத்தின் அணைக்கட்டினை பலப்படுத்துவற்காக மேற்கொள்ளப்பட்ட மண் நெருக்கத்தினை பரீட்சிப்பதற்காக ரூபா 17.82 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் முறையற்ற மண் நெருக்கங்கள் மேற்கொள்ளப்பட்டமையால் அணைக்கட்டானது 06 இடங்களில் பாதகமாக சேதமடைந்திருந்தது. மேலும், ரூபா 286,000 கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட அணைக்கட்டின் புல் பதித்தல் வேலைகளானது. வறட்சியான காலங்களின் போது புற்களினை பராமரிப்பதற்காக முறையான நடைமுறைகளின்மையால் தொடர்ச்சியாக தோல்வியடைந்திருந்தது என வேலைத்தள விஜயத்தில் வெளிப்பட்டிருந்தது.

(ஈ) கிளிநொச்சி மாவட்டத்தில் புதுமுறிப்பு குளத்தின் அணைக்கட்டினை புனரமைப்பதற்காக கற்குவியலின் 2238 கனசதுர மீற்றர்களை அகற்றுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும், வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், கற்குவியலின் 1229 கனசதுர மீற்றர்கள் மாத்திரம் அகற்றப்பட்டிருந்ததுடன் அகற்றப்பட்ட கற்குவியலின் உண்மையான அளவினை நிரூபிப்பதற்கான ஆவணச் சான்று கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. செயற்திட்டப் பணிப்பாளரின் விளக்கங்களின் பிரகாரம், அகற்றப்பட வேண்டியிருந்த கற்குவியலின் அளவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடானது அனுமானிக்கப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அகற்றப்பட்ட கற்குவியலின் உண்மையான அளவானது மதிப்பிடப்பட்ட அளவினை விட மிகவும் குறைவாக இருந்தது.

(உ) 2013 இல் ரூபா 1.83 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் பூர்த்திசெய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உப்பளவங்களப்பு உப்பு நீர் அகற்றல் திட்டத்தின் புனரமைப்பு வேலைகள் உரிய குளத்தின் அணைக்கட்டு பல இடங்களில் சேதமடைந்திருந்தமையால் குறித்த நோக்கத்திற்காக வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரின் விளக்கங்களின் பிரகாரம், கமநல சேவைகள் திணைக்களத்தால் தொடர்ச்சியான பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், வெள்ளப்பெருக்கு காலத்தில் வதிவிடங்கள் வெள்ளத்தில் மூழ்கியமையாலும் அணைக்கட்டு சேதமடைந்திருந்தமையாலும் அப்பகுதி வதிவிடங்கள் குளத்தின் அணைக்கட்டினை மீறி ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

செயற்திட்டத்தின் சிவில் வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒபப்ந்தகாரர்களுக்கான பெறுமதி சேர் வரிகளுக்காக அவர்களின் பதிவுகளின் செல்லுபடியாகும் தன்மையை சரிபார்க்காமல் பெறுமதி சேர் வரிக்காக செயற்திட்டமானது கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகையால், செயற்பாடற்றுக் காணப்பட்ட பெறுமதி சேர் வரிக்கான பதிவுகளை கொண்டுள்ள 28 ஒப்பந்தகாரர்களுக்கு ரூபா 32.27 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரிகள் செலுத்தப்பட்டிருந்தன.

### 3.4 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்

செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 நவம்பர் 30 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்குகளை முடிவுறுத்துவதற்கும் அதற்கான நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பதற்கும் செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.